IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No.34 /2024

dated : 29.07.2025

D.W.1

Name சீனிவாசன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

என் அப்பா இறக்கும்போது பெரும் தனவந்தர் என்றால் சரிதான். என் தந்தை அச்சகம் நடத்தி வந்தார். தீப்பட்டி தொழிற்சாலைகளை மனைவி மற்றும் மக்கள் பெயரில் நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. என் தாயாருக்கு பிறந்த ஊர் பிரம்மதேசம். என் அம்மாவின் தந்தை பெயர் பாடாலிங்கம். என் தாத்தா பாடாலிங்கத்திற்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி மூலம் பிறந்தவர்கள் ஆண் ஒன்றும், பெண் மூன்று பேரும் பிறந்தனர். இரண்டாவது மனைவிக்கு எத்தனை குழந்தைகள் என்று எனக்கு தெரியாது. அவர்களில் எத்தனை பேர் தற்போதும் உயிருடன் உள்ளார்கள் என்று தெரியாது. எனக்கு 5 வயதாக இருக்கும்போது தாத்தா வீட்டிற்கு சென்றேன். பாடாலிங்கத்திற்கு எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்ன வருமானம் கிடைத்தது என்று எனக்கு நேரில் தெரியாது. வசதியாக இருந்தவர் என்று மட்டும் தெரியும். எவ்வளவு வசதியானவர் என்று தெரியாது. எனது எதிர் வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் என் தாய் வழி தாத்தாவிற்கு பெரும் பண வசதி

இருந்தது என்ற விவரங்களை கூறவில்லை என்றால் சரிதான். என் தாய் வழி தாத்தா என் அம்மாவுக்கோ, அவருடன் பிறந்த சகோதரிகளுக்கோ சொத்துக்கள் ஏதும் தரவில்லை. என் தாத்தாவிடமிருந்து என் அம்மாவிற்கு எவ்வித வருமானம் கிடைத்தது என்று நேரில் தெரியாது. அம்மாவிற்கு திருமணத்தின் போது எவ்வளவு சீதனம் கொடுத்தார்கள் என்று தெரியாது கேள்விப்பட்டதுதான். என் அம்மாவிற்கு எவ்வளவு நகை போடப்பட்டது என்றும் கேள்விப்பட்டதுதான். நான் கூறும் எதிர்வாதத்திற்கு என் தாய்வழி தாத்தா பெருமளவு நகை, பணம் சீதனமாக கொடுத்திருந்தார் என்று நிரூபித்தால்தான் எனது எதிர்வாதம் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலும் என்றால் சரிதான். என் தாய்வழி தாத்தா கொடுத்த பணம், நகையை கொண்டு என் அம்மா தனியே வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வந்தார். என் தாயார் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வந்தார் என்பதை நிரூபிக்க ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாயாரின் வங்கி கணக்கு எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாயாரின் வங்கி கணக்கை பார்த்தால் என் தாயாருக்கு அவர் செய்து வந்த தொழில் மூலம் கிடைத்த வருமானம் பற்றிய விவரங்கள் தெரியும் என்றால் சரியல்ல. என் தாயார் தனியே வெளியே செல்லமாட்டார் என்றால் சரியல்ல. என் தாயார் எனக்கு தெரிந்து 3 முறை பதிவாளர் அலுவலகம் சென்று வந்துள்ளார். என் தாயார் கிரையம் பெற்ற எந்த ஆவணத்திலும் என் தாயார் நேரடியாக பணம் செலுத்திய விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றும் என் தந்தையின் நண்பர் சிதம்பர தாண்டவ புலவர்

மற்றும் மீனாட்சிசுந்தரம் ஆகியோர் மூலம் பணம் செலுத்தப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். என் அப்பா எங்கள் குடும்ப தலைவர் என்றால் சரிதான். என் தந்தை பெயரில் பல தொழில்கள் செய்து வந்தால் வருமான வரி செலுத்துவதில் பிரச்சனை ஏற்படும் என்பதற்காக அவர் தன் மனைவி பெயரிலும், ஆண் மக்கள் பெயரிலும் அச்சகம் மற்றும் தீப்பட்டி தொழிற்சாலை நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. யார் பெயரில் உரிமம் பெறப்படுகிறதோ அவர் பெயரில்தான் தொழில் நடத்தப்படும் என்றால் சரிதான். அதே நபர் பெயரில்தான் விற்பனை வரி, வருமான வரி, உரிம கட்டணம் போன்றவை செலுத்தப்படும் என்றால் சரிதான். பி.சா.ஆ.6 ஆவணத்தில் என் தாயாருக்கு வருமான வரி செலுத்தக்கூடிய அளவிற்கு வருமானம் இல்லை என்றும் எனவே வரி செலுத்த தேவையில்லை என்றும் பின்னால் வருமான வரி செலுத்தும் அளவிலான வருமானம் ஈட்டியதாக கண்டுபிடிக்கப்பட்டால் வருமான வரி செலுத்த வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.6 அறிவிப்பு அனுப்பப்பட்ட காலம் வரை வருமான வரி செலுத்தும் அளவிற்கு வருமானம் இல்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.10 ஆவணத்தில் கூறப்படும் சொர்ணா மேட்ச் இண்டஸ்ட்ரீஸ் முகவரி என் தந்தையின் முகவரியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். யார் பெயரில் சொத்திற்கான ஆவணம் உள்ளதோ அவர் பெயரில்தான் குடிநீர் கட்டணம், சொத்து வரி செலுத்தப்படும் என்றால் சரிதான். என் தாயாரின் சொந்த பணத்தைக் கொண்டுதான் தீப்பட்டி தொழிற்சாலை அவர் பெயரில் துவங்கப்பட்டது என்பதற்கு என்னிடம் தனிப்பட்ட

ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். என் அப்பாவின் சுய வருமானத்தைக் கொண்டுதான் எங்கள் பெயரிலும் என் தாயார் பெயரிலும் தொழிற்சாலை துவக்கப்பட்டு சொத்துக்களும் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. பிராது 1வது தபசில் 1 முதல் 6 இலக்க சொத்துக்களும் என் தாயார் பெயரில் என் தந்தையால் மனைவி என்ற முறையில் பிணாமியாக வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. அந்த சொத்துக்கள் மற்றும் தொழிற்சாலை துவக்குவதற்கும், வாங்குவதற்கும் தாய்வழி தாத்தா கொடுத்த பணம் நகையை கொண்டுதான் தொழில் துவங்கி சொத்துக்கள் வாங்கப்பட்டது என்பதற்கு என்னிடம் ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். என் தந்தை கடுமையான உழைப்பாளி என்றால் சரிதான். அவருக்கு பூர்விகமாகவும் சில சொத்துக்கள் கிடைத்தது அவை காலி மனையாகும். அதில் மூன்று வீடுகள் உள்ளது. எனக்கோ என் சகோதரர்களுக்கோ தொழில் துவங்க தனிப்பட்ட வருமானம் மற்றும் தொகை இருந்ததற்கு எங்களிடம் ஆவணங்கள் ஏதுமில்லை என்றால் சரிதான். என் தந்தையின் வருமானத்தைக் கொண்டுதான் என் தாயார் பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டு தீப்பட்டி தொழிற்சாலை அமைக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னால் தனிப்பட்ட முறையில் வருமானம் கிடைத்து அதனடிப்படையில் தொழில் துவங்கப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அதைப்போலவே என் சகோதரர்களுக்கும், தனியே தொழில் துவங்குவதற்கு வருமானம் இருந்து வந்தது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கும், என் சகோதரர்களுக்கும் அவரவர்

துணைவியாரின் பெற்றோர் வீட்டிலிருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டு தனிதனியே தொழில் துவங்கப்பட்டது. இந்த விவரங்களை எதிர்வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். என் தந்தைதான் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை மேற்பார்வையிட்டு வந்தார் என்றால் சரியல்ல. எனது மாமனார் வசதியானவர்தான் அவர் இராஜபாளையத்தைச் சேர்ந்தவர். என் மனைவி நகைகளை விற்றுதான் தொழில் துவங்கினேன். என் மனைவி நகைகளை எங்கு எவ்வளவுக்கு விற்றேன் என்பதற்கு ஆவணங்கள் இல்லை. வழக்குரை 7 முதல் 9 தபசில் சொத்துக்களை என் தந்தை சுயமாக சம்பாதித்தார். 30.09.1965 என் அண்ணன் மோகன் பெயரில் சொத்து கிரையம் பெறப்பட்டது அது என் அப்பா வாங்கினார் என்றால் சரியல்ல. அந்த சொத்தை கிரையம் பெறும்நாளில் என் சகோதரர் மோகன் இளவர் என்றால் சரிதான். அந்த சொத்தை என் தந்தை உயிருடன் இருக்கும்வரை அவர்தான் அனுபவித்து வந்தார். ஒரு பாகப்பிரிவினை ஆவணத்தை எழுதும்போது அந்த சொத்தில் உரிமை இருந்தால் மட்டுமே அது பற்றிய பாகப்பிரிவினை ஆவணம் எழுதப்படும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 22.09.1962 ல் பாகப்பிரிவினை நடைபெற்றபோது என் மூத்த சகோதரர் மட்டும் உரிய வயது அடைந்தவர் ஆவார் மற்றவர்கள் இளவர்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் அனைத்தும் என் தந்தை பெயரில் இருந்தது என்றால் சரிதான். என் அண்ணனுக்கு அப்போது தனிப்பட்ட வருமானமோ, சொத்துக்களோ இல்லை என்றால் சரிதான்.

மேற்படி ஆவணம் என் சகோதரர் தனியே தொழில் செய்ய வேண்டும் என்பதற்காக அவர் பெயரில் எழுதப்பட்டது என்றால் சரிதான். அப்போது அவருக்கு 20 வயது இருக்கும். அவருக்கு எவ்வித வருமானமும், சொத்தும் இல்லாததால்தான் பாகப்பிரிவினை ஆவணம் உருவாக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் எத்தனை தபசில் சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினையின் மூலம் எனக்கும் எனது சகோதரர்களுக்கும் என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று தற்போது என்னால் கூற இயலாது என்றால் சரிதான். பாகப்பிரிவினைக்கு பின்னரும் என் தந்தைதான் அதை மேற்பார்வை செய்து அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். புளியங்குடியில் உள்ள நரசிம்மபெருமாள் கோவில் தெரு, சுப்பிரமணியசாமிகோவில் தெருவில் உள்ள காலி மனைகளில் என் தந்தை வீடுகள் கட்டினார் என்றால் சுப்பிரமணியசாமிகோவில் தெருவில் உள்ள வீட்டை மட்டும் என் அண்ணன் கட்டினார். என் அண்ணனும் அம்மாவும்தான் தனிப்பட்ட முறையில் கட்டினார்கள் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நரசிம்மபெருமாள்கோவில் தெரு, சுப்பிரமணியசாமிகோவில் தெரு, காலாடி வடக்கு தெருவில் உள்ள வீடுகளை என் அப்பா யாதொரு ஏற்பாடு ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துபோனார் என்றால் சரியல்ல. ஆனால் உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார். மேற்படி உயில் ஆவணம் 10.11.1968 ல் எழுதப்பட்டது. என் தந்தை 12.08.1975 ல் இறந்துபோனார். என் அப்பா இறக்கும்போது என் அம்மாவுடன் நாங்கள் 10 பேர் அவருக்கு வாரிசுகள். என் அப்பா

இறந்தபின்னர் நாங்கள் சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வந்தோம் என்றால் சரியல்ல. உயில் ஆவணப்படி அனுபவித்து வந்தோம். என் அப்பாவின் கடைசி உயிலே அதுதான். அது என் அம்மாவும், அப்பாவும் சேர்ந்து எழுதிய உயில் ஆகும். நாங்கள் அதன்படியே நடந்து கொண்டோம். என் சகோதரர் செல்வலிங்கம் திருமணம் ஆகாமல் இறந்துபோனார். என் சகோதரி ரங்கநாயகி இறக்கும்போது விருப்புறுதி ஆவணம் எதுவும் எழுதி வைக்கவில்லை. அவரது வாரிசுகள்தான் 5 முதல் 8 பிரதிவாதிகள். என் தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை நாங்களும் 5 முதல் 8 பிரதிவாதிகள் அனுபவித்து வந்தோம் என்றால் சரியல்ல. என் தாயார் படிப்பறிவுயற்றவர் என்றால் சரியல்ல 7 ம் வகுப்பு வரை படித்துள்ளார். என் தாயாரின் அறியாமையை பயன்படுத்தி அவரிடமிருந்து பல ஆவணங்களில் கையொப்பம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. 16.06.2010 அன்று என் தந்தை வழி சொத்துக்கள் தாய் வழி சொத்துக்களை பெண் மக்கள் நீங்கலாக நாங்களும், என் தாயாரும் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். என் அப்பா இறக்கும்போது அவர் பெயரில் சில சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். அந்த சொத்துக்களையும் உள்ளடக்கி பாகம் பிரிக்கும்போது பெண் மக்களையும் தரப்பினர்களாக சேர்க்காமல் பாகம் பிரித்துக் கொண்டோம் என்றால் சரிதான். ஏனென்றால் என் தந்தையின் சொத்துக்கள் உயிலின் படி எங்களுக்கு பாத்தியப்பட்டதாகும். நாங்கள் உயில்படிதான் பிரித்துக் கொண்டோம். பாகப்பிரிவினையில் என் தாயாரின் சொத்துக்களையும் உள்ளடக்கி பாகம் செய்து

கொண்டோம். என் தாயார் இறக்கும்போது 25 பவுண் நகை இருந்தது என்றால் சரிதான். பின்னர் சாட்சி கூறுகிறார் உயிருடன் இருக்கும்போதே அந்த நகைகளை பேரன், பேத்தி விசேஷங்களுக்கு சிறிது சிறிதாக கொடுத்துள்ளார். இந்த விவரங்களை எதிர் வழக்குரையிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான். என் தாயார் இறக்கும்போது விட்டுச் சென்ற 25 பவுண் நகை மற்றும் 50 ஆயிரம் மதிப்புடைய பண்ட பாத்திரங்களை நாங்களே கைவசப்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. இந்த விவரங்களை எதிர் வழக்குரையிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான். என் தாயார் உயிருடன் இருக்கும் வரை என் தந்தையின் சொத்துக்கள் மற்றும் தொழிலிருந்து கிடைத்து வந்த வருமானத்தில் பிரதிவாதிகளுக்குரிய பங்கை கொடுத்து வந்தோம் என்றால் சரியல்ல. 16.06.2010 அன்று பாகப்பிரிவினை ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் அவ்வாறு பாகம் பிரித்துக் கொண்ட விவரம் வாதிகளுக்கு தெரியாது என்றால் சரியல்ல. பெயரளவிற்கு ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் என்றும் தற்போதும் சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. வழக்குரை சொத்துக்களில் என் சகோதரிகள் ஒவ்வொருவருக்கும் தலா 1/8 பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. என் தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் 9 முதல் 20 பிரதிவாதிகள் வாடகைக்கு இருக்கிறார்கள் என்றால் சரியல்ல அம்மா மற்றும் அப்பா சொத்துக்கள் ஆகும். என் தாயார் இருக்கும்வரை அதிலிருந்து கிடைத்த வருமானத்தை

நாங்கள்தான் அனுபவித்தோம் பெண் மக்களுக்கு பங்குதரவில்லை. வாதிகள் பாகம் கோரி அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். நாங்கள் இருவர் மட்டும் பதில் அறிவிப்பு அனுப்பினோம். அதற்கு பதில் அனுப்பினோம். ஆனால் பாகம் பிரித்து தரவில்லை என்றால் சரிதான். அறிவிப்பு கிடைத்தவுடன் மாவட்ட நீதிமன்றத்திலும், சங்கரன்கோவில் சார்நீதிமன்றத்திலும் கேவியட் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். சீனிவாசன் மேட்ச் இண்டஸ்ட்ரீஸ் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்று விவரங்களை எதிர் வழக்குரையிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரியல்ல கூறியுள்ளேன். 1970 ல் துவக்கப்பட்டது. சிவா மேட்ச் இண்டஸ்ட்ரீஸ் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்று விவரங்களை எதிர் வழக்குரையிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான். சொர்ணா மேட்ச் இண்டஸ்ட்ரீஸ் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்று விவரங்களை எதிர் வழக்குரையிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான். என் பெயரிலும், சகோதரர்கள் மற்றும் தாயார் பெயரிலுள்ள அனைத்து தொழில்களும் என் தந்தையின் வருமானத்தைக் கொண்டு எங்கள் பெயரில் துவக்கப்பட்டது என்றால் சரியல்ல. 10.11.1968 ல் என் தந்தை எழுதி வைத்ததாக கூறப்படும் உயில் ஆவணம் மோசடியானது என்றால் சரியல்ல. அது பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். 25.11.1954, 10.11.1968 உயில் ஆவணங்கள் மோசடியானது என்றால் சரியல்ல. அவை நடைமுறைக்கே வரவில்லை என்றால் சரியல்ல. என் தந்தை எத்தனை உயில் எழுதினார் என்று

எனக்கு தெரியாது. 12.08.1975 ற்கு முன்பு என் தந்தை எழுதி வைத்ததாக கூறப்படும் உயில் ஆவணம் அனைத்தும் மோசடியானது என்றால் சரியல்ல. 16.06.2010 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் என் சகோதரிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்தால் அதன் மூலம் எந்த உரிமையும் ஏற்படாது என்றால் சரியல்ல. என் சகோதரிகள் திருமணம் குற்றாலத்தில் உள்ள ராயல் பங்களாவில் நடைபெற்றது என்றால் சரிதான். என் தந்தை வசதியானவர் என்பதால் அவ்வாறு வெகு சிறப்பாக நடைபெற்றது என்றால் சரிதான். ஒவ்வொரு பெண் மக்களுக்கும் 100 பவுன் நகை போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காலத்திலேயே ரூ.50,000/-க்கும் மேல் சீர்வரிசை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரூ.25,000/- ரொக்கமும் கொடுக்கப்பட்டது என்று சாட்சி கூறுகிறார். ராஜலட்சுமி, ரங்கநாயகி, லேகாம்பாள் ஆகியோருக்கு என் தந்தை திருமணம் செய்து வைத்தார். மற்றவர்களுக்கு என் அண்ணன் திருமணம் செய்து வைத்தார். அந்த திருமணச் செலவுகள் என் தந்தையின் தொழில்கள் என் தாயாரின் தொழில்கள் மற்றும் எங்கள் வருமானத்திலிருந்து நடத்தப்பட்டது. அவ்வாறு எங்கள் வருமானத்தைக் கொண்டு நடத்தி வைக்கப்பட்டது என்று எங்கள் வசம் ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். இந்த விவரங்களை எதிர் வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் அப்பாவிற்கு பெண் மக்கள் மீது அதிகமான பாசம் உள்ளது என்றால் சரியல்ல அனைவர் மீதும்

ஒரேவிதமாகத்தான் பாசமாக இருந்தார். எல்லோரையும் சமமாக நடத்தினார் என்றால் சரிதான். ராஜலட்சுமிக்கும் அவரது கணவருக்கும் சேர்த்து ஆழ்வார்குறிச்சியில் 16.06.1968 ல் 44 செண்ட் இடம் வாங்கிக் கொடுத்தார். என் தந்தை நடத்தி வந்த தொழிலிருந்து வாங்கப்பட்டது என்றால் என் அம்மாவும், அப்பாவும் செய்த தொழில்மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டு வாங்கப்பட்டது. அப்போது எனக்கு 18 வயது. என் பெயரில் ஒரு தொழில் துவங்கப்பட்டது. மோகன் பெயரில் வள்ளி மேட்ச் இண்டஸ்ட்ரீஸ் என்ற தொழில் துவங்கப்பட்டது. இரண்டும் என் தந்தையின் வருமானத்தைக் கொண்டு துவக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் அண்ணனின் மாமனார் கொடுத்த தொகையைக் கொண்டுதான் என் அண்ணன் பெயரில் தொழில் துவங்கப்பட்டது. இந்த விவரத்தையும் எதிர் வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரிதான். என் அப்பா எழுதி வைத்ததாக கூறப்படும் உயில்கள் என் சகோதரர்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல. 1968 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை பற்றி எங்களுக்கும் என் சகோதரிகளுக்கும் தெரியும். எப்போது என் சகோதரிகளுக்கும் தெரியும் என்று இந்த விவரத்தையும் எதிர் வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரிதான். தீபாவளி, பொங்கல், நிகழ்ச்சிகளை ஒரே இடத்தில் குடும்பமாக கொண்டாடுவோம் என்றால் சரியல்ல. எங்கள் குடும்ப சுப நிகழ்ச்சிகளுக்கு சகோதரிகள் வருவார்கள். வாதிகள் அறிவிப்பு அனுப்பும் வரை குடும்ப சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில் இருந்து வந்தது என்றால் சரியல்ல. வாடகை வருமானத்தில் வாதிகளுக்கும் பங்கு கிடைக்கும்

உரிமையுள்ளது என்றால் சரியல்ல. கூட்டு அனுபவத்தில் உள்ளதால் வாதிகள் கோரும் பரிகாரம் சரியானது என்றால் தவறாகும். வாதிகள் கோரும் பரிகாரம் பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.29 18:05:59 +0530